بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 7

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

08 ஜமாதிஸ் ஸானி 1440 ஹிஜ்ரி கமரி 14 தப்லீக் 1398 ஹிஜ்ரி ஷம்ஸி
14 பிப்ரவரி 2019


## அல்லாஹ்வின் கட்டளை

لَا يَتَّخِذِ الْمُؤْمِنُوْنَ الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ ۚ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ فَلَيْسَ مِنَ اللّٰهِ فِيْ شَيْءٍ اِلَّآ اَنْ تَتَّقُوْا مِنْهُمْ تُقٰىةً ؕ وَيُحَذِّرُكُمُ اللّٰهُ نَفْسَهٗ ؕ وَاِلَى اللّٰهِ الْمَصِيْرُ

நம்பிக்கை கொண்டவர்கள், நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு நிராகரிப்பவர்களை நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டாம். நீங்கள் அவ்வாறு செய்தால், நீங்கள் உங்களை உங்களிடமிருந்து முற்றிலும் பாதுகாத்துக் கொள்ளாதவரை உங்களுக்கு அல்லாஹ்வுடன் எதிலும் எந்தத் தொடர்பும் இருக்காது. அல்லாஹ் தனது தண்டனை குறித்து உங்களை எச்சரிக்கின்றான். அல்லாஹ்விடமே (நீங்கள்) திரும்பிச் செல்ல வேண்டும். (3:29)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எதிரிகளுடன் எதிர்ப்பை வெளிப்படுத்தியவாறு நடந்து கொள்ளக் கூடாது. மாறாக, அதிகமாக துஆவுடன் பணியை மேற்கொள்ள வேண்டும்**

**மக்கள் உங்களுக்கு துன்பத்தைக் கொடுப்பார்கள். மேலும் எல்லா வகையிலும் கஷ்டத்தை ஏற்படுத்துவார்கள். ஆனால் நமது ஜமாஅத்தைச் சேர்ந்த மக்கள் உணர்ச்சிவசப்படக் கூடாது. மன எழுச்சியின் மூலம் உள்ளத்திற்கு துன்பத்தை தருகின்ற வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது**

**செல்வந்தர்களிடம் நயவஞ்சகத்தனம் இருக்கின்றது. ஆனால் இன்றைய ஆலிம்களிடம் இவர்களை விட அதிகமாக இருக்கின்றது. அவர்களது ஆணவம் ஒரு சுவரைப் போன்று அவனது வழியில் தடையாக இருக்கிறது. நான் இந்த சுவரை உடைக்க விரும்புகின்றேன். இந்த சுவர் உடைந்து விட்டால் பிறகு அவர்கள் பணிவுடன் வருவார்கள்**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### எதிரிகளுடன் துஆ செய்தவாறு நடந்து கொள்ள வேண்டும்

அன்னார் கூறினார்கள்: நாம் சில இடங்களில் எதிரிகளுடன் கடினமாக நடந்து கொண்டுள்ளோம். அவர்களுடைய ஆணவத்தை நீக்குவதற்காகவே அவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது. அது கடினமான வார்த்தைகளுக்கு எதிரில் பதில் கொடுக்கும் விதமாக அல்லாமல் சிகிச்சை அளிக்கும் விதமாக ஒரு கசப்பான மருந்தாக இருந்தது اَلْحَقُّ مُرٌّ. ஆனால் ஒவ்வொரு நபரும் இவ்வாறான எழுத்துக்களை பயன்படுத்துவது ஆகுமானது கிடையாது. ஜமாஅத் மக்கள் இதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

பிடிவாதம் மற்றும் எதிர்ப்பின் காரணமாக இத்தகைய வார்த்தைகளை எழுதுகின்றாரா? அல்லது இந்த பணி ஏதாவதொரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் நடைபெறுகின்றதா? என்று ஒவ்வொரு நபரும் முதலில் தமது உள்ளத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: எதிரிகளுடன் எதிர்ப்பை வெளிப்படுத்தியவாறு நடந்து கொள்ளக் கூடாது. மாறாக, அதிகமாக துஆவுடன் பணியை மேற்கொள்ள வேண்டும். மேலும் இதர வழிமுறைகளின் மூலம் முயற்சி செய்ய வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: மக்கள் உங்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பார்கள். மேலும் எல்லா வகையிலும் கஷ்டத்தை ஏற்படுத்துவார்கள். ஆனால் நமது ஜமாஅத்தைச் சேர்ந்த மக்கள் உணர்ச்சிவசப்படக் கூடாது. மன எழுச்சியின் மூலம் உள்ளத்திற்குத் துன்பத்தைத் தருகின்ற வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது.

அல்லாஹ்விற்கு இத்தகைய மக்கள் விருப்பமானவர்களாக இருப்பதில்லை. நமது ஜமாஅத்தை அல்லாஹ் ஒரு முன்னுதாரணமாக ஆக்க விரும்புகின்றான்.

அன்னார் கூறினார்கள்: இது விண்ணின் பணியாகும். மேலும் விண்ணின் பணிகள் நின்று விட முடியாது. இந்த விவகாரத்தில் ஒரு கடுகளவு கூட நமது தலையீடு கிடையாது.

அன்னார் கூறினார்கள்: மக்களது தீய ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு எமது உள்ளம் உணர்ச்சிவசப்படுவதில்லை.

அன்னார் கூறினார்கள்: செல்வந்தர்களிடம் நயவஞ்சகத்தனம் இருக்கின்றது. ஆனால் இன்றைய ஆலிம்களிடம் இவர்களை விட அதிகமாக இருக்கின்றது. அவர்களது ஆணவம் ஒரு சுவரைப் போன்று அவனது வழியில் தடையாக இருக்கிறது. நான் இந்த சுவரை உடைக்க விரும்புகின்றேன். இந்த சுவர் உடைந்து விட்டால் பிறகு அவர்கள் பணிவுடன் வருவார்கள்.

அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் இறையச்சமுடையவர்களை நேசிக்கின்றான். இறைவனது மகத்துவத்தை நினைவு கூர்ந்து அனைவரும் அஞ்சுங்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். நாம் அனைவரும் அல்லாஹ்வின் அடியார்கள் ஆவோம். எவர் மீதும் அநீதி இழைக்காதீர்கள். மேலும் அழுத்தம் கொடுக்காதீர்கள். எவரையும் ஏளனத்துடன் பார்க்காதீர்கள். ஜமாஅத்தில் ஒரு நபர் அசுத்தமானவராக இருப்பார் என்றால் அவர் அனைவரையும் அசுத்தமானவராக ஆக்கி விடுகின்றார். மன எழுச்சியின் பக்கம் உங்களது இயல்பு செல்கின்றதென்றால் பிறகு உள்ளத்தைக் குலுக்கி, கோபத்தை வெளிப்படுத்துகின்ற இந்த எண்ணம் எந்த நீரூற்றிலிருந்து வெளிவந்துள்ளது என்பதைப் பாருங்கள். இது மிகவும் சோதனைக்குரிய இடமாகும்.

### இறையச்சத்தை மேற்கொள்வது தொடர்பான அறிவுரை

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நமது ஜமாஅத்தின் நலனுக்காக மிக முக்கிய விஷயமாக இறையச்சம் தொடர்பாக அறிவுரை செய்ய வேண்டும் என்ற விஷயமே தெரிய வருகின்றது.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அன்ஸார் கூட்டத்தினரே! உங்களில் நன்மைகளில் முன்னேறிய எத்தகைய சிலர் இருக்கின்றனர் என்றால் அவர்கள் அல்லாஹ்வின் மீது ஏதாவதொரு விஷயத்தை ஆணையிட்டுக் கூறினால் அவரது அந்த கூற்றை அல்லாஹ் நிறைவேற்றி விடுகின்றான்**

**கட்டுப்படுதல், கலப்பற்றதன்மை, நன்றியுணர்வு ஆகியவற்றை கொண்டிருந்த பத்ர் போர் சஹாபிகளான ஹஸ்ரத் கல்லாது பின் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹிந்தே! அம்ர் பின் ஜமூஹ், உமது மகன் கல்லாது மற்றும் உமது சகோதரர் அப்துல்லாஹ் சுவர்க்கத்தில் நண்பர்களாக இருக்கின்றனர்**

**மதிப்பிற்குரிய மர்ஹூம் அஹ்மது ஷஹீது சாஹிப் அவர்களின் மனைவியான அமெரிக்காவைச் சேர்ந்த பழைய அஹ்மதி ஸிஸ்டர் ஆலியா ஷஹீது சாஹிபா அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 11 ஜனவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

**ஹஸ்ரத் கல்லாது பின் அம்ர் பின் ஜமூஃ.** இவர் அன்ஸாரி சஹாபியாக இருந்தார்கள். இவர் பத்ர் சஹாபாக்களைச் சார்ந்தவர். இவரது தந்தையார் அம்ர் பின் ஜமூஹ். சகோதரர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி), ஹஸ்ரத் அபூ ஏமன் (ரலி), ஹஸ்ரத் முஅவ்வஸ் (ரலி) ஆகியோருடன் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் அபூ ஏமன் பற்றி இவருக்கு சகோதரர்கள் இல்லை. இவரது தந்தையார் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூவின் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள் என்றும் வருகிறது.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 184 கல்லாது பின் அம்ர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போருக்காகப் புறப்படும்போது ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் தமது படையுடன் மதீனாவுக்கு வெளியே சுக்யா என்ற இடத்தில் தங்கினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் கதாதா தமது தந்தையாரிடமிருந்து அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸுக்யா என்ற மதீனாவுக்கு வெளியிலுள்ள ஓரிடத்தில் வீடுகளுக்கு அருகில் தொழுதார்கள். மதீனாவாசிகளுக்காக துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் அத்தீ பின் அபிஸ் ஸக்யா பின் அம்ர். அதே இடத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். தங்கியிருக்கும்போது சில அறிவிப்புகளின் அடிப்படையில் அப்துல்லாஹ் பின் அம்ப்ர் பின் ஹராம் அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நீங்கள் இங்கு தங்குவதும் சஹாபிகளை கணக்கெடுப்பதும் மிகச் சிறந்த விஷயமாகும். இதனை நான் ஒரு நல்ல சகுனம் என்று கருதுகிறேன்.

எங்களுக்கிடையில் அதாவது பனூ ஸலமா மற்றும் அஹ்லே ஹுஸைகா ஆகியோருக்கிடையில் மோதல் ஏற்பட்டபோது நாங்கள் இங்குதான் கூடாரமிட்டிருந்தோம். (ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: அவர் இஸ்லாத்தை முன்னுள்ள ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்)

மதீனாவின் சுற்றுப் புறத்தில் ஸுஸைகா என்னும் பெயர் கொண்ட ஒரு மலை உள்ளது. ஹுஸைகா என்பது அந்த மலைக்கு அருகிலுள்ள ஓர் இடமாகும். அங்கு பெரும் எண்ணிக்கையில் யூதர்கள் வந்திருந்தனர். அந்த இடத்தில் நாங்களும் வருகை தந்தோரை கணக்கெடுத்தோம். போருக்கு செல்ல சக்தி படைத்தோருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. சண்டையிட தகுதியில்லாதோரை திருப்பி அனுப்பப்பட்டது. பிறகு நாங்கள் யஹூதிகளின் ஹுஸைகாவைச் சேர்ந்த யூதர்களின் பக்கம் கவனத்தை திருப்பினோம். குஸைகாவின் யஹூதிகள் எல்லா யஹூதிகளையும் வெற்றி கொண்டிருந்தார்கள். அவர்கள் தாம் விரும்பியோரை கொன்று வந்தனர். அவர்களுக்குள் சண்டை நடந்து வந்தது.

அவர் கூறினார்: யா ரஸூலல்லாஹ்! எனக்கு நம்பிக்கை உள்ளது. நாம் குறைஷிகளை எதிர்த்து நின்றால் நிச்சயமாக அல்லாஹ் உங்கள் கண்களை குளிரச் செய்வான். எவ்வாறு பழங்காலத்தில் எங்களுக்கு வெற்றி கிடைத்ததோ அதைப் போன்று உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

ஹஸ்ரத் கல்லாது பின் அம்ர் கூறுகிறார்: பகல் வந்தபோது நான் குர்பாவிலுள்ள என் வீட்டிற்குச் சென்றேன். குர்பா என்பது பனூ சலமாவின் வீடு இருந்த இடத்திற்குப் பெயராகும். அப்போது எனது தந்தையார் அம்ர் பின் ஜமூஹ் கூறினார்: நீங்கள் சென்று விட்டீர்கள் என்று நினைத்தேன். பிறகு வரக்கூடிய அறிவிப்பிலிருந்து தெரிந்திருப்பீர்கள். தந்தையார் அம்ர் பின் ஜமூஹ் பத்ரில் கலந்து கொண்டார். ஆனால் தந்தையார் கலந்து கொள்ளவில்லை என்று அதில் வந்தது. ஓர் அறிவிப்பில் அவ்வாறு உள்ளது. பிறகுள்ள அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

அவர் கூறினார்: நீங்கள் சென்று விட்டீர்கள் என்று நினைத்தேன். அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் ஸுக்யாவின் மைதானத்தில் உங்கள் படைகளை எண்ணிக் கொண்டிருந்தீர்கள். மேலும் ஹஸ்ரத் அம்ர் கூறினார்: நல்ல சகுனம். நான் எதிர்பார்க்கிறேன். நீங்கள் கனிமத் (போர்ப் பொருட்களை) பெறுவீர்கள். குறைஷிகள் மீது வெற்றி பெறுவீர்கள். நாங்கள் உஸைகாவை நோக்கி செல்லும்போது என்று அந்த பழைய காலத்தில் நடந்த விஷயம் மீண்டும் வருகிறது. அப்போது யூதர்களுடன் சண்டை நடந்தது.

ஹஸ்ரத் கல்லாத் கூறுகிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதன் ஹுஸைகா என்ற பெயரை மாற்றி சுக்யா என்று வைத்தார்கள். நான் சுக்யா என்ற அவ்விடத்தை வாங்கி விட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் எனக்கு முன்பே சஅது பின்

அபீ வகாஸ் (ரலி) இரண்டு ஒட்டகத்தை விலையாக கொடுத்து வாங்கி விட்டார். சிலரது கருத்தின்படி 7 அவ்கியா அதாவது 280 திர்ஹம் கொடுத்து வாங்கி விட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டபோது கூறினார்கள்: இது மிகவும் இலாபகரமான வியாபாரம் ஆகும்.

(கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 37,38 – 2013 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஃஜமுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 258 சுக்யா, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கல்லாது அவர்களின் தந்தை அம்ர் பின் ஜமூஹ் பத்ர் போரில் கலந்து கொள்ளவில்லை. ஹஸ்ரத் கல்லாது, அம்ர் பின் ஜமுஹ், ஹஸ்ரத் அபூ ஏமன் ஆகிய மூவரும் உஹது போரில் கலந்து கொண்டார்கள். மேலும் இம்மூவரும் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 226 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா பாப் ஸிக்ர் மனாகிப் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

மூவரில் அவரும், சகோதரரும், தந்தையும் உஹது களத்திற்கு வந்தார்கள். அம்ர் பின் ஜமுஹூக்கு போரில் கலந்து கொள்ள விருப்பம் இருந்தது. ஆனால் அவரது காலில் பலவீனத்தால் – அவரது ஒரு காலில் ஊனம் இருந்தது. அவர் ஊனமுற்றவர். எனவே பத்ரில் கலந்து கொள்வதிலிருந்து மகன்கள் தடுத்து விட்டனர்.

அறிவிப்பில் கல்லாதின் தந்தையார் அம்ர் பின் ஜமுஹ் பற்றி வருகிறது. பத்ர் நடந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஹாதிற்காக கூறியபோது இவரது காலில் இருந்த பலவீனத்தினால் இவர் போரில் கலந்து கொள்வதிலிருந்து இவரது மகன்கள் இவரைத் தடுத்து விட்டனர். அல்லாஹ்வும் ஊனமுற்றவர்களை போரிலிருந்து தடுத்துள்ளான். எனவே மகன்களும் அவரை தடுத்தனர். பையன்கள் சண்டைக்கு சென்றனர். பிறகு இவர் செல்ல வேண்டிய தேவை என்ன? அல்லாஹ்விடமிருந்து விடுப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறகு மகன்கள் கூறியதால் அவருக்கு கலந்து கொள்ள விருப்பம் இருந்தும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் உஹது போரின்போது அம்ர் தமது மகன்களிடம் கூறினார். நீங்கள் என்னை பத்ரிலும் கலந்து கொள்ள விடவில்லை. இப்போது உஹது உடைய வேளை வந்துள்ளது. இப்போது என்னை தடுக்க முடியாது. நான் உஹதில் கலந்து கொள்வேன் என்றார். எவ்வாறிருப்பினும் உடல் ஊனத்தினால் பிள்ளைகள் தடுக்க நினைத்தனர்.

ஆனால் அவரே நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, அனுமதி வாங்குவேன் என்றார். ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் சென்று என் மகன்கள் என்னை பத்ரில் தடுத்து நிறுத்தி விட்டனர். இப்போது நான் இந்தப் போரில் உங்களுடன் கலந்து கொள்ள விரும்புகிறேன். இறைவன் மீது ஆணையாக! நான் உறுதியாக நம்புகிறேன். அல்லாஹ் எனது உள்ளத்து ஆசையை நிறைவேற்றுவான். எனக்கு ஷஹாதத்தை வழங்குவான். இதே ஊனமுற்ற காலுடன் நான் சொர்க்கத்தில் நுழைவேன் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய ஊனத்தை ஏற்றுக் கொள்வான். எனவே உங்கள் மீது கடமையில்லை என்று கூறி விட்டு அவரது மகன்களிடம், நீங்கள் இவரை இவரது நற்செயலிலிருந்து தடுக்காதீர்கள். இவரது உள்ளத்தின் விருப்பம் அவ்வாறு இருக்கும் என்றால் அதனை நிறைவேற்ற விடுங்கள். அல்லாஹ் அவருக்கு ஷஹாதத் வழங்கட்டும். ஹஸ்ரத் அம்ர் தமது ஆயுதத்தை எடுத்துக் கொண்டு துஆ செய்தவாறு உஹது மைதானத்தை நோக்கிச் சென்றார்.

اَللّٰھُمَّ ارْزُقْنِی شَھَادَۃً وَلَا تَرُدَّنِی اِلٰی اَھْلِی خَائِبًا

அல்லாஹ்வே! எனக்கு ஷஹாதத்தை வழங்க வேண்டும். நான் ஒருபோதும் இயலாதவனாக விட்டை நோக்கி திரும்பி வரக்கூடாது என்பதே அவரது துஆவாக இருந்தது. அல்லாஹ் அவரது துஆவை ஏற்றான். அவர் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 195,196 கல்லாது பின் அம்ர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கல்லாது உடைய தாயார் ஹஸ்ரத் ஹின்த் பின்த் அம்ர். இவரது தந்தையும் அம்ர். கணவரின் பெயரும் அம்ர் ஆகும். ஜாபிர் பின் அப்தில்லாஹ் உடைய மாமி ஆவார்கள். உஹது போரில் ஹஸ்ரத் ஹிந்த் அவர்கள் தமது கணவர், தமது மகன், தமது சகோதரன் ஆகியோர் மரணமடையக் கண்ட பிறகு அவர்களின் சடலங்களை ஒட்டகத்தில் ஏற்றி உஹதுக்கு கொண்டு செல்லுமாறு கட்டளையிடப்பட்டது. உஹதிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

(அஸாபா தொகுதி 2 பக்கம் 287 – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முதலில் மூவரும் ஷஹீதாகி இருக்கும்போது மதீனாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன் விபரம் அடுத்து வருகிறது. இறைவனது விருப்பம் உஹதின் ஷஹீதுகள் உஹதிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றிருந்தது.

இதன் விவரம் இவ்வாறு கிடைக்கிறது: உஹது போரின்போது பெண்கள் வீட்டிலிருந்து வெளியே வந்தனர். பர்தா கட்டளை வரவில்லை. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹர்ரா என்ற இடத்தை அடைந்தபோது ஹிந்த் பின்த் அம்ர் அவர்களை சந்தித்தார்கள். இவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ரின் சகோதரி ஆவார்கள். அவர் தமது ஒட்டகத்தை ஒட்டினார். கணவர் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ், ஹஸ்ரத் கல்லாது பின் அம்ர், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் ஆகியோரது சடலங்கள் அதில் இருந்தன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஏதாவது செய்தி உண்டா? மக்களை பின்னால் விட்டு விட்டு வருகிறீர்கள் என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா போர்க்களத்தைப் பற்றி செய்தி தெரிந்து கொள்ள விரும்பினார்கள். அப்போது ஹஸ்ரத் ஹிந்த் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நன்றாக இருக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின் எந்த துன்பமும் எளிதானதுதான். வேறு எந்த செய்தியும் இல்லை. அன்னார் நலமாக உள்ளார்கள் என்றார். பிறகு ஹஸ்ரத் ஹிந்த் ஒரு வசனத்தை ஓதினார்கள்.

وَرَدَّ اللّٰہُ الَّذِیۡنَ کَفَرُوۡا بِغَیۡظِہِمۡ لَمۡ یَنَالُوۡا خَیۡرًا

وَ کَفَی اللّٰہُ الۡمُؤۡمِنِیۡنَ الۡقِتَالَ ؕ وَ کَانَ اللّٰہُ قَوِیًّا عَزِیۡزًا (33:26)

"அல்லாஹ் நிராகரிப்பவர்களை எந்த நல்ல விஷயத்தையும் பெற விடவில்லை. கோபத்துடன் திரும்பி விட்டான். முஃமின்களுக்கு அல்லாஹ்வே போரில் போதுமானதாகி விட்டான். அல்லாஹ் மிகவும் சக்தி வாய்ந்தவனும் வெற்றியாளனும் ஆவான்".

ஹஸ்ரத் ஆயிஷா கேட்டார்கள். இந்த ஒட்டகத்தில் இருப்பவர்கள் யார் யார்? ஹிந்த் கூறினார்: எனது சகோதரர் கல்லாது. பிறகு அம்ர் பின் ஜமூஹ். ஹிந்துவின் கணவரின் பெயரி

அம்ர் ஆகும். நான் மாமனார் என்று கூறினேன். ஹஸ்ரத் ஆயிஷா கேட்டார்கள். இவர்களின் சடலங்களை எங்கே எடுத்துச் செல்கிறீர்கள்? மதீனாவில் நல்லடக்கம் செய்வதற்காக எடுத்து செல்கிறேன் என்று கூறி விட்டு ஒட்டகத்தை ஓட்டினார். ஒட்டகம் உட்கார்ந்து விட்டது. கூறினார்கள்: இதில் சுமை அதிகம் என்றதும் ஹிந்து கூறினார்.

இது இரண்டு ஒட்டகத்தின் சுமையை தாங்கிக் கொள்கிறது. இப்போது முற்றிலும் மாற்றமாக உள்ளது. அவர் ஒட்டகத்தை கண்டித்தார். அது எழுந்ததும் மதீனா நோக்கித் திரும்பினார். அது உட்கார்ந்து விட்டது. பிறகு உஹதினை நோக்கி திருப்பியதும் விரைவாக ஓடியது. பிறகு ஹிந்த் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இந்த சம்பவம் குறித்து தெரிவித்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த ஒட்டகம் மதீனாவின் பக்கம் செல்லக் கூடாது; உஹதின் பக்கமே செல்ல வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது என்று கூறினார்கள்.

இது மதீனாவின் பக்கம் செல்லக் கூடாது. உஹதின் பக்கமே இருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. போருக்குச் செல்லும் முன் உமது கணவர் எதுவும் கூறினாரா? என்று கேட்டார்கள். அம்ர் உஹது நோக்கிப் புறப்படும்போது, அல்லாஹ்வே! என்னை எனது வீட்டினரிடம் வெட்கத்துடன் திரும்ப வைத்து விடாதே. எனக்கு ஷஹாதத்தை வழங்குவாயாக என்று துஆ செய்தார்.

உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதன் காரணத்தால்தான் ஒட்டகம் திரும்பிச் செல்லவில்லை என்று கூறினார்கள். அன்ஸார் மக்களில் சில நல்ல மக்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு ஒரு வார்த்தை கூறினால் அல்லாஹ் அவரது வார்த்தையை கண்டிப்பாக நிறைவேற்றுகிறான். அம்ர் அத்தகையோரில் ஒருவர் ஆவார் என்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்ர் உடைய மனைவியை அழைத்து, ஹிந்தாவே! உனது சகோதரர் ஷஹீதானதில் இருந்து மலக்குகள் இவரை எங்கு அடக்குவார்கள் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். ஷஹீதானவர்களின் உடல்கள் அடக்கப்படும் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கேயே இருந்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: ஹிந்தே! அம்ர் பின் ஜமுஹ், உனது மகன் கல்லாது மற்றும் சகோதரர் அப்துல்லாஹ் ஆகியோர் ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்கிறார்கள். உடனே ஹிந்து கேட்டார். அல்லாஹ்வின் தூதரே! எனக்காகவும் துஆ செய்யுங்கள். என்னையும் அவர்களின் நட்பில் இணைக்கட்டும் என்றார்.

(கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 232,233 கஸ்வா உஹது – 2013 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்த சஹாபி **ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர்** பற்றி கூறப்படும். இவரது தாயார் பெயர் ஃபுகைஹா பின்த் சகன். தந்தை ஆமிர் பின் நாயிபி ஆகும். தாயாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்யும் சிறப்பைப் பெற்றிருந்தார். ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் மக்காவில் வந்து ஈமான் கொண்ட 6 பேர்களுள் ஒருவர் ஆவார். இவர் பிறகு பைஅத்தே உக்பா முதலாவது மற்றும் இரண்டாவதிலும் கலந்து கொண்டார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 28 உக்பா பின் ஆமிர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 301 ஃபகீஹா பின்த் சகன் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதன் விவரத்தை மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவை வந்தடைந்தார்கள். அதற்கு முன் அன்னார் வழக்கம்போல் அங்கு புனித எல்லைக்குள் சுற்றிப் பார்த்தார்கள். சுவைத் மதீனாவில் மிகவும் பிரபலமான மனிதர் ஆவார். வீரம், தைரியம், மற்ற சிறப்பம்சங்களும் இருந்ததால் முழுமையானவராக கூறப்பட்டு வந்தார். அவர் ஒரு கவிஞராகவும் இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது தங்குமிடத்தை தெரிந்து கொண்டு அவரிடம் சென்று அவரிடம் இஸ்லாம் பற்றி அழைப்பு விடுத்தார்கள். என்னிடமும் ஒரு சிறப்பான தூதுச் செய்தி உள்ளது. அது மஜல்லா லுக்மான் ஆகும் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அதிலிருந்து சிறிது என்னிடம் கூறுங்கள் என்றார்கள். அவர் அதில் ஒரு பகுதியை கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை பாராட்டினார். மிகச் சிறந்த விஷயங்கள் கூறப்பட்டன. என்னிடமும் ஒரு வாக்கியம் உள்ளது. அது மிக உயர்ந்ததும் மேலானதும் ஆகும். மிகவும் உயர்ந்தது என்றார்கள். பிறகு திருக்குர்ஆனின் சிறு பகுதியை ஓதினார்கள். அவர்கள் முடிந்ததும் அவர், ஆம் நிச்சயமாக இது மிகச் சிறந்த வாக்கியம்தான் என்றார்.

அவர் முஸ்லிமாகவில்லைதான். எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தினார். பொய்ப்படுத்தவில்லை. ஆனால் பரிதாபம். மதீனாவுக்கு திரும்பியதும் அவருக்கு நிறைய அவகாசம் கிடைக்கவில்லை. திடீரென்று அவர் கொல்லப்பட்டு விட்டார். இது முஆஸ் போருக்கு முன் நடந்ததாகும். முஆஸ் போருக்கு முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ் சமயத்தில் பிறகும் ஒருமுறை அந்த கோத்திரத்தாரிடம் சென்றார்கள். திடீரென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பார்வை சில அந்நிய மனிதர்கள் மீது பட்டது. அவர்கள் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். சிலை வணங்கிகளான கஸ்ரஜ் கோத்திரத்தாருக்கு எதிராக குறைஷிகளிடம் உதவி கேட்டு வந்திருந்தனர்.

இதுவும் முஆஸ் போருக்கு முந்தைய சம்பவமாகும். இந்த உதவியும் அந்த போருக்கான ஓர் ஆயத்தமே ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம் சென்றார்கள். இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். அன்னாரது சொற்பொழிவு கேட்டு அதிலிருந்த இயாஸ் என்ற இளைஞர், இறைவன் மீது ஆணை. முஹம்மது (ஸல்) அவர்கள் எதனை நோக்கி அழைக்கிறார்களோ அது நாம் எதற்காக இங்கு வந்துள்ளோமோ அதனை விடச் சிறந்தது என்றார். போருக்கு உதவி கோரி வருவதை விட அல்லாஹ்வின் பக்கம் திரும்புவது சிறந்தது என்றார்.

அந்தக் கூட்டத்தின் தலைவர் ஒரு மண் கட்டியை எடுத்து அவரை முகத்தில் அடித்து அமைதியாக இரு. நாம் இதற்காக இங்கு வரவில்லை என்றார். அவர் அப்போது ஈமான் கொண்டாலும் அமைதியாக இருந்து விட்டார். இயாஸ் நாட்டுக்கு திரும்பியதும் அவர் மரணிக்க வேண்டிய நேரம் வந்தது. அவரது நாவில் ஏகத்துவ வசனங்கள் வந்தன. அதற்குப் பிறகு ஆஸ் போர் வந்தது. நுபுவ்வத்தின் 11 –வது வருடம் ரஜப் மாதம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யஸ்ரிபின் யூதர்களைச் சந்தித்தார்கள். கஸ்ரஜ் கோத்திரத்தினர் யஸ்ரபிலிருந்து வந்திருந்தது அப்போது தெரிய வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் அன்புடன் எனது சிறு வார்த்தைகளைச் சற்று கேட்கலாமா? என்று

கூறினார்கள். என்ன கூறுகிறீர்களோ கூறுங்கள் என்றனர். அன்னார் அங்கு அமர்ந்தார்கள். அவர்களுக்கு இஸ்லாம் பற்றி அழைப்பு கொடுத்தார்கள். திருக்குர்ஆனின் சில வசனங்களை ஓதிக் காண்பித்து அறிவுறுத்தினார்கள். அவர்கள் ஒருவர் மற்றவரை நோக்கி இது எத்தகைய சந்தர்ப்பம்! மற்றவர்கள் இதில் நம்மை முந்தி விடக் கூடாது என்று நினைத்து உடனே முஸ்லிமாயினர்.

அவர்களின் பெயர்கள்:

1) அபூ உமாமா அஸ்அது பின் ஸுராராஹ். இவர் நஜ்ஜாரைச் சார்ந்தவர். இவர் அனைவரிலும் முதலில் இருந்தார்.

2) அவ்ஃப் பின் ஹாரிஸ். இவரும் நஜ்ஜாரைச் சார்ந்தவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தந்தை வழிப்பாட்டனார் அப்துல் முத்தலிபின் மனைவியின் வழியிலுள்ள நன்னியால் உடைய கோத்திரத்தைச் சார்ந்தவர்.

3) ராஃபி பின் மாலிக். இவர் பனூ ஸுரைக்கைச் சார்ந்தவர். அதுவரை திருக்குர்ஆனில் இறங்கிய வசனங்களை அவருக்கு வழங்கினார்கள்.

4) குத்பா பின் ஆமிர். இவர் பனூ சலமாவைச் சார்ந்தவர்.

5) உக்பா பின் ஆமிர். பனூ ஹராமைச் சார்ந்தவர். உக்பா பின் ஆமிர் பத்ர் சஹாபி ஆவார். (இந்த முழு சம்பவத்திலும் இவரைப் பற்றியே கூறப்படுகிறது.)

6) ஜாபிர் பின் அப்தில்லாஹ் பின் ரியாப். இவர் பனூ உபைதைச் சார்ந்தவர்.

இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டுப் பிரிந்து செல்லும்போது கூறினர். எங்களை கோத்திரச் சண்டை மிகவும் பலவீனப்படுத்தி விட்டது. எங்களுக்குள் அநேக கருத்து வேறுபாடுகள் உள்ளன. யஸ்ரிபு சென்று எங்கள் நண்பர்களிடம் தப்லீக் செய்வோம். உங்கள் மூலமாக அல்லாஹ் எங்களை மீண்டும் ஒன்று சேர்க்கட்டுமாக. பிறகு நாங்கள் எல்லா வகையிலும் உங்களுக்கு உதவி செய்யத் தயாராக உள்ளோம். இதனைக் கூறி விட்டு இவர்கள் சென்று விட்டனர். யஸ்ரிபில் இஸ்லாம் பற்றிய சர்ச்சைகள் நடந்தன. அவ்வருடம் யஸ்ரிப்வாசிகளிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காரணிகளைப் பொருத்தவற்றில் நம்பிக்கையிலும் நம்பிக்கையின்மையான நிலையிலும் கழித்தார்கள். பெரும்பாலார் அன்னார் அந்த 6 உண்மைப் படுத்தியவர்களின் நிலைமைகள் எவ்வாறிருந்தன என்று கவலை கொண்டார்கள்.

யஸ்ரிபில் வெற்றிக்கான ஏதாவது வழி ஏற்பட்டதா? இல்லையா? என்று நினைத்தார்கள். முஸ்லிம்களுக்கு அக்காலம் வெளிப்படையான சூழ்நிலைகளைப் பொருத்தமட்டில் நம்பிக்கை மற்றும் நம்பிக்கையின்மையின் காலம்தான். திடீரென நம்பிக்கை ஊட்டுகிற நிலையும் சில வேளை நம்பிக்கையற்ற நிலையும் காணப்பட்டது. மக்காவின் தலைவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பிரச்சாரத்தை கடுமையாக மறுத்து விட்டனர் என்பதைப் பார்த்தார்கள். மற்ற அரபு கோத்திரங்களும் ஒவ்வொரு கோத்திரமாக வந்து எதிர்ப்பின் முத்திரையைப் பதித்து வந்தது.

மதீனாவில் நம்பிக்கையின் ஒளிக்கதிர் தென்பட்டது. அந்த ஒளிக்கதிரை துன்பங்கள் தொல்லைகள் என்னும் புயல்வீசி மறைத்து அதனை நிலைக்க விடாதோ என்று தோன்றியது. ஒருபுறம் மக்காவாசிகளின் அநீதி அதிகமாகிக் கொண்டே சென்றது. அவர்கள், இஸ்லாத்தை அழிக்க இதுதான் நேரம் என்று நன்றாக புரிந்து கொண்டிருந்தனர். இதனை விட நெருக்கடியான நேரம் இஸ்லாத்திற்கு வரவே இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் பரிசுத்த சஹாபிகள் பாறையைப் போன்று நிலைத்து நின்றனர்.

அவர்களின் உறுதிப்பாடு, திடம் எதிரிகளைக் கூட வியப்பில் ஆழ்த்தியது. இம்மனிதர் எத்தகைய உள்ளத்தின் வலிமை உடையவராக இருக்கிறார்? எதுவும் அவரை தன் நிலையிலிருந்து அசைக்க முடியவில்லையே? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேசினால், அவர்களின் பேச்சில் ஒரு திகிலும் கம்பீரமும் இருந்தது. துன்பங்களின் புயலுக்கு மத்தியில் அது உயர்ந்து நின்றது. ஒருபுறம் இக்காட்சிகள் மக்கத்து குறைஷிகளை ஆச்சர்யப்படுத்தியது. மறுபுறம் அவர்களின் உள்ளத்தில் ஓர் ஆவலும் எழுந்தது.

இந்த நாள்களைப் பற்றி சர் வில்லியம் மூர் கூட எழுதியுள்ளார். அந்த நாள்களில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது சமுதாயத்தின் முன் நெஞ்சத்தை நிமிர்த்தி இருந்தார்கள் என்றால் அவர்களால் அசையக் கூட முடியாது. அந்நிலையில் வெற்றியைக் குறித்து திட உறுதியால் நிறைந்திருந்தார்கள். உதவி ஒத்தாசையற்ற மனிதர் மற்றும் அவரது சிறிய கூட்டம் அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அவர்களது சில சஹாபா ஆகியோரின் நிலை ஒரு சிங்கத்தின் வாயில் மாட்டியவரின் நிலையாகும். இந்நிலையில் இறைவனது வாக்குறுதி மீது முழுமையான நம்பிக்கையுடன் இருந்தார்கள்.

அவன் அவர்களை தனது ரஸூலாக்கி அனுப்பி இருந்தான். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தம்மிடத்தில் எத்தகைய உறுதியுடன் இருந்தார்கள் என்றால் அவர்களை எதுவும் தம்மிடத்தில் இருந்து அசைக்க முடியவில்லை. இக்காட்சி எத்தகைய அற்புதகரமான காட்சியைக் காட்டுகிறது. இஸ்ராயீல்களின் ஒரு நிலையைத் தவிர வேறு எங்கும் அது நடைபெறவில்லை. அவர் கடும் துன்பத்தின் நிலையில் இறைவனிடம் கூறினார்கள். எனது எஜமானனே! நான் தனியாக நிற்கிறேன்.

மேலும் எழுதுகிறார்: முஹம்மது (ஸல்) அவர்கள் இஸ்ராயீல் நபிமார்களை விட ஒரு வகையில் உயர்ந்தவராகவே இருந்தார். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய இந்த வார்த்தை எத்தகைய நிலையில் கூறப்பட்டது? எனது சமுதாயமே! நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ செய்யுங்கள். நான் உறுதியாக இருக்கிறேன். இது இஸ்லாத்திற்கு எத்தகைய நெருக்கடியான நிலையாக இருந்தது. மக்காவாசிகளின் தரப்பிலிருந்து ஒருபுறம் அவநம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் மதீனாவில் நம்பிக்கையின் ஒளிக்கதிர் வெளிப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கவனத்துடன் அதனை நோக்கிச் சென்றனர். மதீனாவும் கூட மக்கா மற்றும் தாயிப் போன்று மறுத்து விடுமா? அல்லது அதன் பேறு வேறு விதமாக உள்ளதா தெரியவில்லையே? இந்நிலையில் ஹஜ்ஜின் சந்தர்ப்பம் வந்தது. ஆர்வத்துடன் வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். உக்பாவுக்கு அருகில் நடந்தார்கள். அங்கு அவர்களுக்கு யஸ்ரிபின் சிறு சிறு கூட்டத்தின் பக்கம் பார்வை பட்டது. பார்த்ததும் உடனே அறிந்து கொண்டார்கள். அவர்கள் மிகவும் அன்புடன் வந்து அன்னாரை சந்தித்தனர். இம்முறை 12 பேர் வந்திருந்தனர். சென்ற வருடத்தை விட நல்ல நம்பிக்கை ஏற்பட்டது. அவ்ஸ், கஸ்ரஜ் இரு பிரிவினரின் மக்களும் இருந்தனர்.

1. அபூ உமாமா அஸ்அது பின் ஸுராராஹ்

2. அவ்ஃப் பின் ஹாரிஸ்

3. ராஃபி பின் மாலிக்

4. உக்பா பின் ஆமிர்

5. உத்பா பின் ஆமிர் இவரைப் பற்றியே எடுத்துக் கூறப்படுகிறது. இம்முறையும் அவர் ஹஜ்ஜிற்கு வந்திருந்தார்.

**6.** முஆஸ் பின் ஹாரிஸ். இவர் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர்

**7.** ஸக்வான் பின் அப்தே கைஸ். இவர் பனூ ஸுரைக் கோத்திரத்தைச் சார்ந்தவர்.

**8.** அபூ அப்திர் ரஹ்மான் பின் யஸீத் பின் சஃலபா அஃபனிபலி.

**9.** உபாதா பின் ஸாமித் அஸ்பனி அவ்ஃப். அவர்கள் பனூ அவ்ஸைச் சார்ந்த பனூ பலி கோத்திரத்தைச் சார்ந்தவர்கள்

**10.** அப்பாஸ் பின் உபாதா பின் நஸ்லா. இவர் பனூ சாலிமைச் சார்ந்தவர்.

**11.** அபுல் ஹைஷம் பின் தைஹான். இவர் பனூ அப்துல் அஷ்ஹலைச் சார்ந்தவர்.

**12.** உவைம் பின் சாயிதா. அவ்ஸ் கோத்திரத்தின் பனீ அம்ர் பின் அவ்ஃபைச் சார்ந்தவர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை விட்டு தனித்து மலைகளுக்கு நடுவிலுள்ள ஓரிடத்தில் அவர்களைச் சந்தித்தார்கள். அவர்களிடம் யஸ்ரபின் நிலைமைகளை தெரிந்து கொண்டார்கள். அனைவரும் பைஅத் செய்தார்கள். மதீனாவில் இஸ்லாத்தை நிலைநாட்ட அடிக்கல் அதன் மூலம் நடப்பட்டது. அப்போது ஆயுதம் ஏந்தி போர் செய்ய அனுமதி வழங்கப்படவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம் கீழ்க்கண்ட வார்த்தைகளில் பைஅத் வாங்கினார்கள். ஜிஹாத் கடமையாக்கப்பட்ட பிறகு பெண்களிடம் பைஅத் வாங்கினார்கள். இறைவனை ஒருவன் என்று அறிவோம்; இணை வைக்க மாட்டோம்; திருட மாட்டோம்; விபச்சாரம் செய்ய மாட்டோம்; கொலை செய்ய மாட்டோம்; யார் மீதும் வீண்பழி சுமத்த மாட்டோம்; நன்மையான பணிகளில் உங்களுக்குக் கட்டுப்படுவோம்.

பைஅத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உண்மை மற்றும் உறுதியுடன் இந்த வாக்குறுதியில் நிலைத்து நில்லுங்கள். இதனால் உங்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும். நீங்கள் பலவீனம் காட்டினால் உங்கள் விவகாரம் இறைவனிடம் இருக்கிறது. அவன் விரும்புவதைச் செய்வான்.

இந்த பைஅத் வரலாற்றில் முதலாவது பைஅத்தே அக்பா என்று அழைக்கப்படுகிறது. பைஅத் வாங்கப்பட்ட அவ்விடம் அக்பா என்று அழைக்கப்பட்டது. அதாவது மக்காவுக்கும் மினாவுக்கும் நடுவில் உள்ளது. அதன் பொருள் உயர்ந்த மலைப்பாதை என்பதாகும். பிறகு பைஅத் செய்த அந்த 12 முஸ்லிம்களும் ஓர் இஸ்லாமிய முபல்லிகை எங்களுடன் அனுப்புங்கள் என்றார்கள். அவர் வந்து எங்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். எங்கள் இணை வைக்கும் சகோதரர்களுக் இஸ்லாம் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஸ்அப் பின் உமைர் என்ற அப்துத்தார் என்ற கோத்திரத்தைச் சார்ந்த கலப்பற்ற இளைஞரை அவர்களுடன் அனுப்பினார்கள். அக்காலத்தில் முபல்லிக்மார்கள் காரி அல்லது முக்ரி என்று அழைக்கப்பட்டனர். காரணம் அவர்களது பணி அதிக அளவில் திருக்குர்ஆன் ஓதிக் காட்டுவதாகவே இருந்தது. அதுவே தப்லீகின் சிறந்த வழியாக இருந்தது. முஸ்அப், யஸ்ரிப் சென்று முக்ரி என்ற பெயரில் பிரபல்யம் ஆனார். இரண்டாவது பைஅத்தே அக்பாவில் 70 அன்ஸார் பைஅத் செய்தனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 221–225,227)

ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர். பத்ர், உஹது, அகழ் உட்பட எல்லா போரிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். உஹது நாளில் இவர் பச்சை நிற ஆடை அணிந்திருந்து அதனால் அறியப்பட்டார். இவர் ஹஸ்ரத் அபூபக்ரின் கிலாஃபத் காலத்தில் யமாமா போரில் ஷஹீது ஆனார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 428 உக்பா பின் ஆமிர் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உக்பா பின் ஆமிர் கூறுகிறார்: நான் எனது மகளை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எடுத்து வந்தேன். அப்போது அவள் 9 வயது சிறுமி. எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணம்! மகளுக்கு துஆ கற்றுத் தாருங்கள். அவள் அல்லாஹ்விடம் துஆ செய்யட்டும் என்றார். அன்னார் அம்மக்களிடம், சிறுமியே கூறு.

اَللّٰهُمَّ اِنِّیْ اَسْئَلُكَ صِحَّةً فِیْ اِیْمَانٍ وَ اِیْمَانًا فِیْ حُسْنِ خُلُقٍ وَ صَلَاحًا یَتْبَعُهٗ نَجَاحٌ

அல்லாஹ்வே! ஈமானுடன் கூடிய நல்ல உடல்நலம் கேட்கிறேன். ஈமானுடன் நல்லொழுக்கம் கேட்கிறேன். சமாதானத்துடன் கூடிய வெற்றியை விரும்புகிறேன்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 52 உக்பா பின் ஆமிர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் சஹாபாக்களின் தகுதியை உயர்த்துவானாக.

தற்போது நான் ஜுமுஆவுக்குப் பிறகு அமெரிக்காவைச் சார்ந்த மிகவும் பழைய பெரியவரான ஓர் அஹ்மதி பெண் பற்றிக் கூறி அவரது ஜனாஸாவை தொழ வைப்பேன். இவரது பெயர் ஸிஸ்டர் ஆலியா ஷஹீது சாஹிபா. இவர் அஹ்மது ஷஹீது சாஹிபின் மனைவி ஆவார். 26 டிசம்பர் 2018 –ல் வஃபாத் ஆனார். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَیْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ் இவருக்கு நீண்ட வயதை வழங்கி இருந்தான். பணி செய்யவும் வாய்ப்பு வழங்கினன். இயலாமையில் இருந்து காப்பாற்றினான். இவரது வயது 105. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

அமெரிக்காவின் அமீர் சாஹிப் இவரைப் பற்றி எழுதியுள்ளார்:

இவர் 1936 –ல் பைஅத் செய்யும் வாய்ப்பு பெற்றார். இவர் 1963 முதல் 1966 வரை அமெரிக்காவின் லஜ்னா தலைவியாக பணி செய்துள்ளார். மர்ஹூமாவுக்கு அமெரிக்கா லஜ்னா இமாயில்லாஹ்வின் 50 வருட காலம் ஒரு நீண்ட காலம் சந்தா செயலராகவும், உள்ளூர் கித்மத்தே கல்க் செயலராவும் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. கிலாஃபத்துடன் நல்ல தொடர்பு இருந்தது. எப்போதும் ஜமாஅத்துடன் ஆழமான தொடர்பு வைத்திருந்தார். எல்லா வகையான தியாகங்களுக்கும் எப்போதும் தயாராக இருந்தார். மிகவும் கனிவும் அன்பும் உள்ள பெண்மணியாக இருந்தார்கள்.

இவருக்கு அமெரிக்கா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆரம்ப கால சம்பவங்கள் வாய்மொழியாக நினைவில் இருந்தது. பெரும்பாலும் அதனை கூறி வருவார். சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபிற்கு விருந்தளிக்கவும் வாய்ப்புப் பெற்றிருந்தார். கணவர் கண்ணியத்திற்குரிய அஹ்மது ஷஹீது சாஹிப் மர்ஹூம் அவர்கள் அமெரிக்காவின் தேசிய செயற்குழுவில் பிடிஷ்பர்க் சதர் ஜமாஅத் என்ற முறையில் தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார். மர்ஹூமாவின் நினைவாக ஒரேயொரு மகன் உமர் ஷரீஃப் இருக்கிறார். இவர் கடந்த 18 வருடங்களாக ஜமாஅத்தின் சதர் ஆக தொண்டாற்றும் வாய்ப்பு பெற்றிருந்தார். இவர் ஆப்பிரிக்கன்–அமெரிக்கர் ஆவார்.

அமெரிக்காவின் சதர் லஜ்னா இமாயில்லாஹ் எழுதுகிறார்: மாமியார் பற்றி இவரது ஒவ்வோர் அமைதியும் அசைவும் அவரது பைஅத்தில் அவர் உறுதியாக நின்றது குறித்து எடுத்துக் கூறுவதாக இருந்தன. அந்த பைஅத்தின் உறுதிமொழியை அவர் 76 வருடங்கள் முன்பு எடுத்திருந்தார். அவரது சேவைகள் அமெரிக்கா அளவில் மட்டும் நின்றுவிடவில்லை. மாறாக உலக அளவில் இருந்தது. லஜ்னாவின் எல்லா அமைப்புகளின் தலைமையகமாக பாகிஸ்தான் இருந்தது. மற்ற லஜ்னாக்கள் பாகிஸ்தான் லஜ்னாவின் கீழ் இருந்தனர். அதன் தலைவியாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் மனைவி மர்யம் ஸித்தீகா சாஹிபா இருந்தார்கள். அவர் முழு உலகிற்கும் சதர் லஜ்னாவாக இருந்தார்கள். அவர்கள் இவரது பணியைப் பாராட்டியுள்ளார்கள்.

ஸிஸ்டர் ஆலியாவின் பெயர் எல்லாலூயி. இவரது மங்கேத்தர் ப்ரௌனிங். இவர் அமெரிக்க மேங்கிதர் வில்லியம் ஆப்பிரிக்கன் மெதாஸ்ட் சர்ர் ஆட்கள் இவரது திருமணத்திற்கு தயாராகிக் கொண்டிருந்தனர். இவரது கணவருக்கும் அஹ்மதிய்யத்தைப் பற்றி தெரிய வந்தது. வில்லியம்ஸ் சாஹிப் தமது பெற்றோருடன் சேர்ந்து அஹ்மதி ஆகி விட்டார். தமது பெயரை அஹ்மது ஷஹீது என்று வைத்துக் கொண்டார். திருமணம் செய்து விட்டார். ஆனால் முதலில் பைஅத் செய்யவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு இவர் பிட்ஸ்பெர்க் ஜமாஅத்தில் சதர் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜமாஅத் அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டார்.

பிறகு தமது தப்லீக் வேலைகளால் பிரபல்யமானார். இதே நிலையில் இவரது மகன் பிறந்தார். அவருக்கு உமர் என்று பெயர் வைத்தார். ஆலியா சாஹிபா மாமனார் வீட்டில் இருந்தார்கள். மாமனார் வீட்டில் மவுனமாக மறைந்திருந்து ஜமாஅத் நூல்களைப் படித்தார். அந்நிலையில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய அஹ்மதிய்யத் அல்லது உண்மை இஸ்லாம் என்ற நூலை வாசித்தார். அதனால் பெரும் தாக்கத்திற்குள்ளானார். வீட்டில் நடக்கும் தர்பிய்யத் வகுப்புகளில் கலந்து கொண்டார்.

பிறகு ஒருநாள் கண்ணியத்திற்குரிய அப்துர் ரஹ்மான் பங்காலி சாஹிபுடைய சொற்பொழிவு கேட்டார். மஸீஹ் உடைய சிலுவையிலிருந்து விடுதலை மற்றும் காஷ்மீர் பயணம் பற்றிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய கொள்கையை அவர் விளக்கினார். இவற்றை அன்னார் லஜ்னா சதரிடம் கூறியிருந்தார்கள்.

லஜ்னா சதர் எழுதுகிறார்: பிறகு அவர் சர்ச்சுக்குப் போவதை விட்டு விட்டார். இறுதியில் 1936 –ல் பைஅத் செய்தார். ஆலியா என்ற பெயரை ஒரு புத்தகத்தில் படித்தார். நன்றாக இருந்தது. அதனைத் தனக்கு வைத்துக் கொண்டார். அஹ்மதியான பிறகு அதனைத் தொடரச் செய்தார். ஸிஸ்டர் ஆலியா எப்போதும் அறிவைத் தேடுபவர். பள்ளிவாயிலைச் சுத்தம் செய்வார். தொழுவார். நான் அறிவைத் தேடுகிறேன் என்று இருக்காமல் வகாரே அமல் செய்வார். ஜமாஅத் பணிகளையும் செய்வார். எந்த அளவுக்கு என்றால் பள்ளிவாயிலை சுத்தம் செய்தல், உணவு சமைத்தல் இதுவும் செய்வார்.

பிறகு எப்போதும் தொழுது வருவார். நல்லொழுக்கமான வார்த்தைகளை ஈமான் நிரம்பிய வார்த்தைகளைப் பேசுவார். சந்தாக்களை முறையாக வழங்குவார். ஏதாவது நல்ல போதனைகளையும் லஜ்னாவுக்கு வழங்கி வருவார். லஜ்னா ஒருவருக்கொருவர் கருத்தொற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று விரும்புவார். கடைசி நாள்களின் லஜ்னாக்களுக்கு பல கடிதங்கள் எழுதினார்கள். இவர்கள் ஒரு வசனத்தை அடிக்கடி ஓதி வரக் கண்டேன்.

اِنَّ اللّٰہَ یُحِبُّ الَّذِیۡنَ یُقَاتِلُوۡنَ فِیۡ سَبِیۡلِہٖ صَفًّا کَاَنَّہُمۡ بُنۡیَانٌ مَّرۡصُوۡصٌ

நிச்சயமாக அல்லாஹ் எத்தகைய மக்களிடம் அன்பு கொள்கிறான் என்றால் அவர்கள் ஒரு ஈயத்தால் உருக்கி வார்க்கப்பட்ட சுவர் போன்று அணிவகுத்து நின்று யுத்தம் செய்கின்றனர்.

சதர் லஜ்னா எழுதுகிறார்: முதலில் அமெரிக்காவில் மஸ்ஜிது ஃபண்டின் அடிக்கல் நாட்டினார். பிறகு முஸ்லிம் Student Scholarship Fund –ஐ தொடங்கினார். பிறகு அவரது தலைமையில்தான் முதன் முதலாக வருடாந்திர இஜ்திமா தொடங்கியது. பிறகு National Tableeq Day –ஐ தொடங்கினார். அவர் காலத்தில் லஜ்னா திருக்குர்ஆனின் ஆயிரக்கணக்கான பிரதிகளையும் பிரசுரங்களையும் நாட்டின் நூலகங்களுக்கு அனுப்பியது. லஜ்னாவுக்கு இவர் ஒரு பத்திரிகையைத் தொடங்கினார்.

அதன் பெயரை லஜ்னாவின் முழு உலக தலைவி மர்யம் ஸித்தீகா சாஹிபா அவர்கள் மர்யம் என்று பெயர் வைத்தார்கள். இவர்கள் The Path of Faith மற்றும் Our Duties என்ற பெயரில் லஜ்னாவில் லாயிஹே அமல் வெளியிட்டார். அதனைப் பார்த்து அவரது தூண்டுதலால் அமெரிக்காவில் லஜ்னா உறுப்பினர்கள் டென்மார்க்கில் உருவான மஸ்ஜிதிற்குரிய நிதியில் விரைந்து பங்கெடுத்தனர். அதேபோன்று பால்டிமோர் பெட்ரஸ்பர்க் உடைய மிஷன் ஹவுஸிற்காக ஃபண்டு தயாரித்தார்கள்.

மேலும் கூறுகிறார்: ஸிஸ்டர் ஆலியா எப்போதும் கூறுவார். இக்காலத்தில் 98 சதவீதம் பெண்கள் ஜமாஅத்தில் பைஅத் செய்து நுழைந்திருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் ஆரம்பத்திலேயே தொழவும் நோன்பு நோற்கவும் மட்டும் போதிக்க வேண்டும். உடனேயே பர்தா அணிவதற்குப் பதிலாக சில காலம் வரை அவர்களுக்கு பொருத்தமான ஆடையை அணியுமாறு கூறி வந்தேன். முதலில் உங்கள் ஆடைகளை ஒழுங்காக்குங்கள். பிறகு திரையிடுங்கள். பர்தா அணியுங்கள் என்று கூறினார்களாம்.

தற்காலிக லஜ்னாக்களைப் போன்றல்ல. பர்தா அணிந்திருந்தவர்களும் பர்தாவை கழற்றி விட்டனர். அவர் கொஞ்சம் கொஞ்சமாக பர்தாவில் கொண்டு வர லஜ்னாக்களை தர்பிய்யத் செய்தார். லஜ்னா உறுப்பினர்களுக்கு திருக்குர்ஆன் ஓத வைக்க மிகவும் முயற்சி செய்தார். திருக்குர்ஆன் ஓத வைக்க நிறைய முயற்சி செய்தார். லஜ்னா பார்த்து ஓதி முழுமைப்படுத்தினார்கள் எனில் பிறகு விரிவுரை படிக்குமாறு கவனமூட்டுவார்.

ஆலியா சாஹிபாவின் முயற்சியால் லஜ்னாவில் ஒரு பாடத்திட்டம் தயார் செய்யப்பட்டது. நாஸிராத்துக்கு மார்க்க அறிவைப் பெற ஆர்வம் ஏற்பட்டது. மர்ஹூமா பெண் உறுப்பினர்களிடம் தியாகத்தின் உயிரை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியுள்ளார். சந்தாக்களின் பெரும் ஒழுங்கை ஏற்படுத்தினார். அவரிடம் ஒருமுறை ஜமாஅத்தில் இணைவதிலுள்ள கஷ்டங்களைப் பற்றி பேச்சு வந்தபோது கூறினார்.

ஜமாஅத்தின் இணைந்த பிறகு நிறைய சோதனைகள் வந்தன. நான் பலவீனம் காட்டுவதற்குப் பதில் உறுதிப்பாட்டைக் காட்டினேன். அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி அடைய முயன்றேன். இதுவே லஜ்னாவுக்கு வழங்கிய பாடமாகும். 50 வருடத்திற்கு மேல் இதனை வழங்கி வருகிறேன். இவரது உறுதிப்பாடு மிகவும் உயர்ந்தது. அதிலிருந்து நாம் வழிகாட்டல் பெறுகிறோம். இஸ்லாம் மார்க்கம் உலகில் எல்லா மார்க்கங்களையும் வெற்றி கொள்வது குறித்து இவர்களுக்கு முழுமையான திட உறுதி இருந்தது.

இஸ்லாத்தின் வெற்றி வந்தால் எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற முழக்கம் உலகில் உறுதி பெறும் என்று கூறுவார். அதுபோன்று கிலாஃபத் அமைப்பின் மீது இவருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. அதனை இஸ்லாத்தின் வெற்றியின் சாவி என்று கருதி வந்தார். கிலாஃபத் அமைப்பு இருந்தால் இஸ்லாம் வெற்றி பெறும் என்று எப்போதும் கூறி வருவார். பிறகு நூற்றுக்கணக்கான போன் கால்கள் மற்றும் கடிதங்கள் மூலம்

இரவு வரை இந்த தூதுச் செய்தியை புரிய வைக்கவும் கொண்டு சேர்க்கவும் முயன்று வந்தார். 23 மார்ச் 2008 –ல் லஜ்னாவுக்கு இவர் வழங்கிய தூதுச் செய்தி இதுவாகும். இவ்வருடம் 2008 ஜனவரிக்கு முழு உலகையும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் ஒன்றுகூடி நன்றி செலுத்தும் விதமாக தஹஜ்ஜுத் தொழுதனர். இப்போது அந்த மஸீஹ் மவ்வூதின் அன்புக்குரிய கிலாஃபத் நிறுவப்பட்டு 100 வருடங்கள் ஆகியுள்ளது.

அல்லாஹ்வே! இந்நிலையில் ஜமாஅத்திற்கு எதிரான எல்லா தடைகளையும் அகற்றுவாயாக. நீ வாக்களித்த வெற்றியைத் தருவாயாக என்று ஏன் கேட்கக் கூடாது? நமது மஸீஹ் மவ்வூது இந்த ஜமாஅத்தின் அடிக்கல் நாட்டினார்கள். அனைவரையும் இணைத்து ஓர் உடலாக்கி உள்ளார்கள். நாம் அஹ்மதிகள். மற்றவரின் வலியை உணர்கிறோம். சோதனைகளில் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்கிறோம். துஆ செய்கிறோம். ஒருவரின் மகிழ்ச்சியில் மற்றவர் மகிழ்ச்சி அடைகிறார். ஒருவர் கஷ்டப்படும்போது மற்றவரும் கஷ்டப்படுகிறார். அல்லாஹ்வின் அருளால் நாம் ஒருவராக இருக்கிறோம்.

பிறகு அவர் தமது தூதுச் செய்தியில் எழுதியுள்ளார். புதிதாக பைஅத் செய்தவர்களுக்கும் எல்லா அஹ்மதி லஜ்னாவுக்கும் கூறியுள்ளார். அல்லாஹ்வின் சிறப்பான அருளால் நாம் நற்பேறு பெற்றவர்கள். ஜமாஅத்தின் முன்னேற்றத்தைப் பார்த்துள்ளோம். அல்லாஹ்வின் கண்ணியம் நம்மை அவனது மார்க்கத்தின் பரப்புதலுக்காக தேர்ந்தெடுத்துள்ளது. ஒவ்வொரு வாரமும் காலத்தின் கலீஃபாவின் வார்த்தைகளைக் கேட்டு அவர்களின் வழிகாட்டலின் படி நடந்தவாறு முன்னேற்றங்களைப் பெற முடியும்.

பிறகு இறுதியில் எழுதியுள்ளார். என் இறைவா! இஸ்லாத்தின் வெற்றிக்கு முன்னுள்ள எல்லா தடைகளையும் அகற்றுவாயாக. எங்களை மார்க்கத்தை உறுதிப்படுத்துபவர்கள் ஆக்குவாயாக. எண்ணற்ற மார்க்க உதவியாளர்களை உருவாக்குவாயாக. லஜ்னாக்கள் குறிப்பாக அமெரிக்காவின் நிலையில் புதிதாக பைஅத் செய்த பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை ஒன்று கூட்டுவதில் பெரும் பங்காற்றியுள்ளார்.

பிரிஸ்பெர்க் ஜமாஅத்தின் சதராக இருக்கிற அவரது மகன் உமர் ஷரீஃப் சாஹிப் எழுதுகிறார்: எனது பெற்றோர் அஹ்மதிய்யத் மற்றும் கிலாஃபத் மூலமாக இஸ்லாத்தைத் தற்காப்பு செய்யும் இராணுவ வீரர்களாக இருந்தனர். நிரந்தரத் தன்மையுடன் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுவார்கள். என்னையும் கூட காலத்தின் கலீஃபாவுக்கும் துஆவுக்கு கடிதம் எழுதுமாறு கூறுவார்கள்.

நானும் எனது பிள்ளைகளும் அவர்களைப் பின்தொடர்ந்து நடக்க துஆ செய்யுங்கள் என்று எழுதுகிறார். என் தாயார் பற்றி ஜமாஅத் மக்கள் எவ்வளவு உணர்வு பொங்க கூறினார்கள் என்றால் முதலில் அதனை எண்ணால் நினைத்துப் பார்க்க முடிந்ததில்லை. இந்த ஜமாஅத்தில் இவர்கள் மீது இவ்வளவு பிடிப்பும் பாசமும் கொண்ட மக்கள் இவ்வளவு பேர் இருக்கிறார்களே? என்று கூறுகிறார்.

இன்னும் உள்ளூர் அமெரிக்க அஹ்மதி ஒருவர் எழுதுகிறார்: ஸிஸ்டர் ஆலியா இஸ்லாம் அஹ்மதிய்யத்தை ஏற்ற பிறகு ஆலியா ஷஹீத் கல்வித்துறை செயலராக இருந்தார்கள். அவர்களால் உருவாக்கப்பட்ட கல்வித் தேர்வில் தோற்று விடக் கூடாது என்று நினைத்து எல்லாரும் சேர்ந்து முயற்சி செய்வோம். வயது அதிகமாக இருந்தும் நட்புரீதியான பழக்கம் இருந்தது. எப்போதாவது அவரிடம் அறிவு ரீதியாக எதுவும் கேள்வி கேட்டால் தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு பதில் தனது கருத்தைப் பற்றி பேசுவதற்குப் பதில் இஸ்லாமிய போதனை இது சம்பந்தமாக எவ்வாறானது என்று எடுத்துக் கூறுவார். இறைவனுடன் உறுதியான தொடர்பு இருந்தது. இதனால் மக்கள் அவர் பக்கம் ஈர்த்து வரப்பட்டனர்.

ஸிஸ்டர் ஜமலா ஹாமித், ஹாமித் முனீர் சாஹிப் இவரும் உள்ளூர் அமெரிக்கன் அஹ்மதி ஆவார். இவர் எழுதுகிறார்: எனது தாயார் என்னை மிகவும் நேசித்தார். அன்பு நிறைந்த கடிதம் ஒன்றை என் தாயார் மரணம் அடைந்தபோது எழுதியிருந்தார். அதன் மூலம் மரணம் பற்றிய தத்துவம் எனக்கு புரிந்தது. எனக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் ஒரு போன் கால் மூலம் அதனை பெறுபவளாக இருந்தேன். வாழ்வின் நோக்கம் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவது அதனை நேசிப்பதாக இருக்க வேண்டும் என்று கூறுவார்.

இதுவே இக்காலத்தில் ஹப்லுல்லாஹ் (அல்லாஹ்வின் கயிறு) ஆகும். அவருக்கு முழுமையாக அன்பும் இறைவன் மீது திட உறுதியும் இருந்தது. அதனை நான் எப்போதும் பொறாமையுடன் பார்த்து வந்தேன். ஒருமுறை நான் அவரிடம் உங்களுக்கு மரணம் பற்றிய பயம் இருக்கிறதா என்று கேட்டேன். அன்னார் செல்வதென்றால் எனது அன்பிற்குரியவனிடம் செல்கிறேன். பிறகு பயம் எதற்கு? என்றார். இவருக்கு இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மக்களுக்கு வழங்கிய தூதுச் செய்தி பற்றிய ஆழிய அறிவு இருந்தது.

பிறகு இன்னோர் உள்ளூர் அஹ்மதி டாக்டர் ரசீது அஹ்மது கூறுகிறார்: இஸ்லாமிய போதனைகளை கடுமையாக தாம் அமல் செய்து வந்தார். ஆனால் மற்றவர்களுக்கு மிகவும் அன்புடன் எடுத்துக் கூறுவார். அவரது ஒவ்வோர் அசைவு அமைதியிலும் இறை அன்பு மிளிர்ந்தது. பலமுறை அவரது வீட்டில் தங்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அவருடன் சேர்ந்து தொழுதுள்ளேன். திருக்குர்ஆன் ஓதி உள்ளேள்.

தனக்கு ஜமாஅத்தின் கலீஃபாக்களிடம் இருந்து வந்த கடிதங்களை அன்புடன் எடுத்துக் காட்டுவார்கள். கிலாஃபத்துடன் அவர்களுக்கு இருந்த பற்று குறித்து அவரால் எழுதப்பட்ட நஸம்களை வாசித்தால் அறியலாம். இவர் நஸம்களும் எழுதியுள்ளார். மிகவும் பொறுமைசாலி. ஒவ்வொரு மாதமும் போன் போட்டு வீட்டின் நிலைமைகளை விசாரிப்பார். அவரது மோசமான உடல்நிலை பற்றிக் கூறும்போது கூட புகார் செய்ததில்லை. அல்லாஹ்வின் கருணைகளை நினைவு கூர்ந்து நன்றி செலுத்தி வந்தார்.

அதுபோன்று இன்னோர் உள்ளூர் அமெரிக்கன் அஹ்மதி ஸிஸ்டர் அஸிஸா அல்ஹாஜ் ரஷீது உடைய மனைவியார் கூறுகிறார்: ஸிஸ்டர் ஆலியா ஷஹீது சாஹிபா. எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்பதன் பௌதீக அடையாளம் ஆவார். வேறு நகரத்தில் இருந்தாலும் அவருடன் பெரும் நட்பு இருந்தது. மரணம் வரை தொடர்பை விடவில்லை. நான் சற்று சோம்பேறித்தனமாக இருப்பதாக உணர்ந்தால் உடனே ஈமானை வலுவூட்டும் கடிதம் எனக்கு எழுதுவார்கள்.

பிறகு இன்னொரு லஜ்னா உறுப்பினர் எழுதுகிறார்: 1949 –ல் நான் முதன் முறையாக அமெரிக்கா வந்த போது ஆலியா சாஹிபாவுடன் அறிமுகம் ஏற்பட்டது. நான் எட்டு வயது பெண்ணாக இருந்தேன். மிகவும் அன்பு காட்டக் கூடிய எளிதாக பழகக் கூடிய பெரும் தாக்கத்தை விடக் கூடிய பெண்மணி. கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு கொண்டவர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் அன்னாரது கடிதத் தொடர்புகளைப் பற்றி எப்போதும் கூறி வருவார்கள். லஜ்னா இமாயில்லாஹ் அமெரிக்காவுக்கு அன்னார் செய்த பணிகள் மறக்க இயலாததாகும்.

மிகவும் வியக்கத்தக்க ஆன்மீக உறுதி கொண்டனர். 100 வயது ஆன பிறகும் கூட மாநாடுகளில் பங்கெடுத்தது நம் அனைவருக்கும் முன்மாதிரியாகும். அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக. அவர்களது சந்ததிகளிலும் அவர்களிடம் காணப்பட்ட மார்க்க உணர்வை ஏற்படுத்துவானாக.

## 124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொற்களும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்த கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்பின் மூலம் தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

**நான் இந்த நகரத்தில் அதாவது காதியானில் இறைவனைப் பார்த்து விட்டேன். நான் இஸ்லாத்தின் அனைத்து முன்னறிவிப்புகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான தொண்டரின் கைகளில் முழுமையடைவதைக் கண்டேன்**

**மஹ்திக்கான வாதம் செய்த பலர் உலகத்தில் வந்துள்ளனர். அவர்கள் தமது பிரச்சாரத்தை உலகில் பரப்புவதற்காக முன்னறிவிப்புகளை செய்தனர். ஆனால் ஒருவரைத் தவிர வேறெவரது கூற்றும் நிறைவேறவில்லை. மேலும் அந்த நபர் பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரது கல்லறையில் “ வாக்களிக்கப்பட்ட மஸீஹும் இமாம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியின் அருளுக்குரிய கல்லறை என்று எழுதப்பட்டுள்ளது”**

**நான் அஹ்மதிகளின் பிரசுரங்களைப் படித்தேன். மேலும் அஹ்மதி முஸ்லிம்களை சந்தித்து அஹ்மதிய்யத்தான் உண்மையான இஸ்லாம் என்றும் அஹ்மதிகள் மற்ற முஸ்லிம்களை விடவும் அதிக உண்மையாளர்களும் உண்மையான முஸ்லிம்களும் ஆவர் என்ற இந்த முடிவை எட்டினேன்**

**மேலும் எத்தனை நூற்றாண்டுகள் கழியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் காதியானிலிருந்து உரத்த குரலில் எழுப்பப்படுகின்ற அந்த முழக்கமே உலகத்தில் கேட்கும் என்பதை நான் நன்கறிவேன்**

**காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட புதிய அஹ்மதிகளின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்**

**உலகத்தில் ஜமாஅத் பரப்பி வருகின்ற அமைதிக்கான தூதுச் செய்தி போற்றத்தக்கதாகும். நான் ஹுஸூர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் உலகத்தில் அமைதியைப் பரப்புகின்றார்கள். உங்களது ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் முழு உலகத்திலும் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் போதனையை வழங்குகின்றார்கள். மேலும் முழு உலகையும் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்**

**முஸ்லிம் சமுதாயம் எப்போதும் சீக்கிய சமுதாயத்தை ஏற்றுக் கொண்டவர்களோடு அனுதாபத்தோடு நடந்து கொண்டுள்ளது. முஸ்லிம் சமுதாயம் ஒவ்வொரு கஷ்டமான நேரத்திலும் எங்களுக்கு உதவி செய்துள்ளது. இந்த இரண்டு சமுதாயங்களின் சிறப்புத்தன்மை என்னவென்றால், இவர்கள் தனித்தவனும், இணையற்றவனுமாகிய இறைவனை வணங்குகின்றனர்**

**உலகத்தில் மனிதத்துவத்தின் முழக்கத்தை முழங்குகின்ற மாநாடுகள் மிகக் குறைவாகவே நடைபெறுகின்றன. மனித இனத்திற்கு தொண்டு செய்வது மிகப்பெரிய வியக்கத்தக் பணியாகும். அதை ஜமாஅத் செய்து வருகின்றது**

**இன்று எத்தகைய சிறப்பான முறையில் அன்பு மற்றும் அமைதியின் தூதுச் செய்தியை ஜமாஅத் தரப்பிலிருந்து வழங்கப்படுகின்றதோ அது போற்றத்தக்கதாகும்**

**காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட சில அரசியல் மற்றும் மார்க்கத் தலைவர்களின் தாக்கங்கள்**

**தகவல்: மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர் (அறிக்கைத் துறை)**

- 48 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர்
- 18,864 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர்
- ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,345 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்
- தஹஜ்ஜுது தொழுகை
- திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச் சூழல்
- கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள்
- மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு
- கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள்
- நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு
- ஜமாஅத் சகோதரர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது
- பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது
- 34 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது
- அச்சகம் மற்றும் மின்னணு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ்
- அமைதி நிறைந்த நல்ல சூழ்நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது
- 19 முதல் 21 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான اِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِيْحُ جَآءَ الْمَسِيْحُ MTA இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டூடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது
- 3 முதல் 5 ஜனவரி வரை *“The Messiah of the Age”* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி MTA –வில் ஒளிபரப்பப்பட்டது

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

**துவக்க அமர்வு:**

124–வது காதியான் ஆண்டு மாநாடு 'புஸ்தானே அஹ்மதில்' மிகவும் பொலிவுடன் ஆரம்பமானது. இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்திருந்த அஹ்மதிய்யத்தின் மீது பேரன்பு கொண்டிருந்தவர்கள் காலையில் மாநாட்டுத் திடலின் வளாகத்தில் விரைவாக வந்து அமரத் தொடங்கினர். அவர்கள் துஆக்கள் செய்து கொண்டிருந்தனர். ஈமானின் எழுச்சியினால் 'நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்' என்ற முழக்கங்களைச் செய்து கொண்டிருந்தனர். இந்த காட்சி ஈமானுக்கு மிகவும் வலுவூட்டக்கூடியதாக இருந்தது.

**கொடியேற்றம்:**

ஜமாஅத்தின் மரபுகளுக்கு ஏற்ப ஒரு பாதுகாப்பான பெட்டியில் அஹ்மதிய்யத்தின் குத்தாம்களின் பாதுகாப்பில் அஹ்மதிய்யத்தின் கொடி மாநாட்டுத் திடலுக்குக் கொண்டு வரப்பட்டது. மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப் சாஹிப் (நாஸிர் நஸ்ரோ இஷாஅத், காதியான்), மதிப்பிற்குரிய வஸீம் அஹ்மத் ஸித்தீக் சாஹிப் (நாஸிர் பைத்துல் மால் ஆமது), மதிப்பிற்குரிய ஜைனுத்தீன் சாஹிப் (சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், இந்தியா), மதிப்பிற்குரிய கே. தாரிக் அஹ்மது சாஹிப் (சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, இந்தியா), மதிப்பிற்குரிய மவ்லானா இனாயத்துல்லாஹ் சாஹிப் (கூடுதல் நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸி), மதிப்பிற்குரிய ஷுஹைப் அஹ்மது சாஹிப் (நாஸிர் பைத்துல் மால் கர்ச்), மதிப்பிற்குரிய முஸஃப்பர் அஹ்மது சாஹிப் (நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா காதியான் மற்றும் அஃப்ஸர் ஜல்ஸா கா காதியான்) ஆகியோர் அஹ்மதிய்யத்தின் கொடியுடன் இருந்தனர்.

காலை சரியாக 10 மணி 8 நிமிடம் ஆன போது மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் அவர்கள் அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றி வைத்து கூட்டுத் துஆ செய்து வைத்தார்கள். கொடி ஏற்றப்பட்டபோது மேடையிலிருந்து ஒலிபெருக்கி மூலமாக ربنا تقبل منا انك انت السميع العليم என்ற துஆ திரும்ப திரும்ப ஓதப்பட்டது. மாநாட்டில் திடலிலிருந்த அனைவரும் இந்த துஆக்களை முழுமையான எழுச்சியுடனும் உருக்கத்துடனும் திரும்ப திரும்ப கூறினர்.

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவரான மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் அவர்களின் தலைமையில் முதலாவது அமர்வு ஆரம்பமானது. நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாதின் முஅல்லிம் மதிப்பிற்குரிய காஸி உஸ்மான் பாஷா சாஹிப் அவர்கள் திருக்குர்ஆனின் சூரத்துல் முல்க்கின் 2 முதல் 15 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். அதன் மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய மவ்லவி தாஹிர் அஹ்மது தாரிக் சாஹிப் (நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா) அவர்கள் செய்தார்கள்.

பிறகு அமர்வின் தலைவர் அவர்கள் தமது துவக்க உரையில் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் அனைவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குரலுக்கு செவிசாய்த்தவாறு அல்லாஹ்வுக்காக இங்கு வருகை தந்துள்ளீர்கள். இதற்காக நான் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அமர்வின் தலைவர் அவர்கள் ஆண்டு மாநாட்டின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் பற்றி எடுத்துக் கூறியவாறு ஆண்டு மாநாடு தொடர்பாக ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய மேற்கோள்களை எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த மாநாட்டில் எத்தகைய உண்மைகளும் இறைஞானமிக்க விஷயங்களும் எடுத்துக் கூறப்படும் என்றால் அது ஈமான், நிச்சய உறுதி, மற்றும் இறை ஞானம் ஆகியவற்றில் ஒருவர் முன்னேறுவதற்கு அவசியமானவையாகும். இந்த மாநாட்டினால் ஒரு தற்காலிக பயனும் ஏற்படும். அதாவது, ஒவ்வொரு புது வருடத்திலும் எந்த அளவு அதிகமாக புதிய சகோதரர்கள் இந்த ஜமாஅத்தில் இணைவார்களோ அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் மாநாட்டில் கலந்து கொண்டு தமக்கு முன்னதாக இந்த ஜமாஅத்தில் இருந்து வருகின்ற பழைய சகோதரர்களின் முகத்தைப் பார்ப்பார்கள்.

அவர்களில் ஒருவர் மற்றவரை அடையாளங்கண்டு கொள்வது மூலமாக பரஸ்பரம் அவர்களுக்கு இடையில் அன்பு மற்றும் அறிமுகத்தின் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். மேலும் இந்த இடைப்பட்ட காலத்தில் மரணமடைந்த அந்த சகோதரரின் மக்ஃபிரத்திற்காகவும் இந்த மாநாட்டில் துஆ செய்யப்படும்..... இந்த ஆன்மீக மாநாட்டில் மேலும் பல பலன்கள் இருக்கும். அது அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இன்ஷா அல்லாஹ். (இஷ்திஹார் 30 டிசம்பர் 1891)

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த மாநாட்டை ஒரு சாதாரண மனிதர்களின் மாநாடு போன்று கருத வேண்டாம். இது எத்தகைய ஒரு விஷயம் என்றால், இதன் அடித்தளமானது முழுக்க முழுக்க உண்மைக்கு ஆதரவாகவும் இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்துவதற்காகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த இயக்கத்தின் அடிக்கல்லை இறைவன் தனது கைகளால் நாட்டி இருக்கின்றான். இதற்காக அவன் சமுதாயங்களை ஆயத்தப்படுத்தியுள்ளான். அவை விரைவாக இதில் வந்து இணையும். ஏனென்றால், இது அந்த வல்லமைமிக்க இறைவனின் செயலாகும். அவனுக்கு முன்னால் நடப்பதற்கு சாத்தியமற்ற எதுவுமே இல்லை.

மதிப்பிற்குரிய கூட்டத்தின் தலைவர் அவர்கள் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரை அடையாளங்கண்டு கொள்வதற்கும், அவர்களை ஏற்றுக் கொள்வதற்கும் நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். மேலும் இந்த மஸீஹ் மற்றும் மஹ்தியின் ஜமாஅத்தில் இணைந்தோம். ஆனால் நாம் நம்மிடத்தில் தூய மாற்றத்தை ஏற்படுத்தியவாறு கருணை காட்டக் கூடிய அந்த இறைவன் முன்னிலையில் குனிபவர்களாகவும், அவனை வணங்குவதிலிருந்து கவனமற்றவர்களாக இல்லாமலும், உலகப் பொலிவுகள், உலகத்தின் பக்கம் ஈர்க்கின்ற விஷயங்கள் நம்மை அல்லாஹ்வை விட்டும் தூரம் கொண்டு சொல்லாமலும், அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுபவர்களாகவும் நாம் இருக்கும்போதுதான் நாம் இந்த ஜமாஅத்தில் நம்மை இணைத்துக் கொண்டதும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதும் நமக்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கும்.

(குத்பா ஜுமுஆ 7 ஏப்ரல் 2017)

இறுதியாக கூட்டத்தின் தலைவர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளின் ஒளியில் மற்றும் கலீஃபாக்களின் கூற்றுக்களின் ஒளியில் நமது நிலைமைகளில் ஓர் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்துவதற்குரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக. இதற்குப் பிறகு அன்னார் கூட்டுத் துஆ செய்தார்கள். இதில் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் பங்கேற்றனர்.

துவக்க உரைக்குப் பிறகு மதிப்பிற்குரிய முபல்லிக் ரிஸ்வான் அஹ்மது ஸஃபர் சாஹிப் அவர்கள் மிகவும் அழகிய குரலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதைகளை படித்துக் காட்டினார்கள்.

*கிஸ் கதர் ஸாஹிர் ஹே நூர் உஸ் மப்தவுல் அன்வார் கா*

*பன்ரஹா ஹே சாரா ஆலம் ஆயினா அப்ஸார் கா*

இதற்குப் பிறகு இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது கரீமுத்தீன் சாஹிப் ஷாஹிது (சத்ர் கஸா போர்டு, காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அன்னாரது சொற்பொழிவின் தலைப்பு ''இறை மறுப்பாளர்களின் ஆட்சேபனைகளும் அதற்கான பதில்களும்'' என்பதாகும்.

அவர்கள் சூரா அல் அஃராஃபின் 173 –வது வசனத்தை ஓதினார்கள்:

وَإِذْ أَخَذَ رَبُّكَ مِنْ بَنِي آدَمَ مِن ظُهُورِهِمْ ذُرِّيَّتَهُمْ وَأَشْهَدَهُمْ عَلَىٰ
أَنفُسِهِمْ أَلَسْتُ بِرَبِّكُمْ قَالُوا بَلَىٰ شَهِدْنَا أَن تَقُولُوا يَوْمَ الْقِيَامَةِ إِنَّا كُنَّا عَنْ هَٰذَا غَافِلِينَ

பொருள்: எனது இறைவன் ஆதமின் மக்களுடைய முதுகுகளிலிருந்து அவர்களின் சந்ததிகளைத் தோற்றுவித்து, அவர்களைத் தங்களுக்கே சாட்சியாக்கி நான் உங்கள் இறைவனல்லவா என்ற (கேள்வியினைக் கேட்ட)போது, அவர்கள் ஆம்! (இதற்கு) நாங்கள் சாட்சி கூறுகின்றோம் என்றனர். நாங்கள் இதை (போதனை)ப் பற்றி அறவே அறியாதவர்களாயிருந்தோம் என்று மறுமை நாளில் நீங்கள் கூறாதிருப்பதற்காகவே (நாம் அவ்வாறு செய்தோம்).

இறை இருப்பு என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையும், உயிருள்ள ஆதாரமுமாகும். எந்த ஆன்மாவும் தனது இயல்பின் அடிப்படையில் இறை இருப்பை மறுக்க முடியாது. மறுப்பவர்கள் தமது எண்ணத்தில் அதற்கான ஆதாரம் கிடைக்கவில்லை என்பதற்காக மறுக்கின்றனர். உலகில் பழமையிலும் பழமை வாய்ந்த சமுதாயங்களிலும் முற்றிலும் மனித இயல்பிற்கேற்பவே இறையிருப்பிற்கான எண்ணமும் கொள்கையும் இருந்து வந்துள்ளது என்பது தெரிய வருகின்றது. மிகவும் கஷ்டமான காலம் வரும்போது மேலும் மனிதனுக்கு தனது மரணம் கண் முன் தெரியும்போது அவன் நாத்திகனாக இருந்தாலும் மனித இயல்பின் அடிப்படையில் தன்னையும் அறியாமல் ராம் ராம் அல்லது அல்லாஹ் அல்லாஹ் என்று கூறத் தொடங்குகின்றான்.

أَفِي اللَّهِ شَكٌّ فَاطِرِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ

அதாவது வானங்களையும் பூமியையும் படைத்தவனாகிய அல்லாஹ்வைப் பற்றி ஏதேனும் சந்தேகம் கொள்கின்றீர்களா?(14:11)

ஒரு நாத்திகவாதி ஒரு சந்தர்ப்பத்தில் இறை இருப்பிற்கான ஆதாரத்தை எடுத்துக் கூறியவாறு எவ்வளவு அழகாக கூறியுள்ளார்.

அவர் கூறுகின்றார்: காட்டில் கால் தடங்களைப் பார்த்து ஒட்டகத்தின் இருப்பை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் கால்களின் அடையாளங்களைப் பார்த்து யாரோ சென்றிருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறிருக்க நட்சத்திரங்களைக் கொண்டு வழிப்பாதைகளை அமைத்துள்ள இந்த வானம் மற்றும் பூமியைப் பார்த்து அதனைப் படைத்த ஓர் இறைவன் இருக்கின்றான் என்று நான் ஏன் கருதக் கூடாது?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதனின் இருப்பே இறை இருப்பிற்கான மிகப்பெரிய ஆதாரமாகும். மனிதப் பிறப்பு, அவனது உடல் ஆகியவை ஒரு வியக்கத்தக்க அற்புதமாகும்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒவ்வொன்றுக்கும் உரிய வடிவம் கொடுத்து அவற்றை சரிவர செயல்பட வழிகாட்டியவனே இறைவனாவான். இந்த வசனத்தின் கருத்தை வைத்து மனித படைப்பிலிருந்து நீர் வாழ், நிலம்வாழ் உயரினங்களின் படைப்பை பார்த்தோமென்றால் இறைவனுடைய வல்லமை என்ன? என்பதை நம்மால் உணர முடியும். ஒவ்வொன்றின் தோற்றமும் அதற்காகவே படைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். கல்வியறிவு படைத்தவர்கள் சுயமே சிந்தித்துப் பாருங்கள். ஏனென்றால் இது மிகவும் நீண்ட கட்டுரையாகும்.

(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி பக்கம் 369)

இன்றைய அமர்வின் இரண்டாவது சொற்பொழிவின் தலைப்பு 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை மனிதத்துவத்தை கண்ணியப்படுத்துதல் என்பதன் ஒளியில்' என்பதாகும். இந்த சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கோரி சாஹிப் (நாஸிர் அஃலா, காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன்பு உலகில் மனிதர்களுக்கு கண்ணியம் வழங்கப்படாமல் இருந்தது. மேலும் மனிதனின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று எண்ணிக் கூட பார்க்க முடியாது. ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள்தான் முதன் முதலில் அடிமைகளை விடுதலை செய்வதற்கான தொடரை ஆரம்பித்து வைத்தார்கள்.

அன்னார் கூறினார்கள்: எவர் சுதந்திரமான நபரை விற்று விடுகிறாரோ அவரை சுவர்க்கத்தின் காற்று கூடத் தொடாது.

(புகாரி, கிதாபுல் பைஃ)

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை ஓர் அடிமை என்ற அளவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்தபோது அன்னார் அவரை விடுதலை செய்தது மட்டுமல்லாமல் அவரை வளர்ப்பு மகனாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அவருடன் எந்த அளவுக்கு அன்புடனும் பரிவுடனும் நடந்து கொண்டார்கள் என்றால் ஸைது அவர்களின் உண்மையான பெற்றோர்கள் அவரைத் தேடியவாறு வந்து அவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு செல்ல விரும்பியபோது அவர்கள் பெற்றோருடன் செல்ல மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருப்பதற்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்கள் அடிமைகள் உங்களின் சகோதரர்கள் ஆவர். எனவே ஒருவரின் கீழ் ஓர் அடிமை இருக்கின்றார் என்றால் அவர் தான் உண்ணும் உணவையே அவருக்கும் உண்ணக் கொடுக்க வேண்டும். தான் அணியும் ஆடையையே அவருக்கும் அணியக் கொடுக்க வேண்டும். நீங்கள் உங்கள் அடிமைக்கு அவருடைய சக்திக்கு அப்பாற்பட்ட சுமையைச் சுமத்தாதீர்கள். அப்படிப்பட்ட வேலையை அவருக்கு நீங்கள் கொடுத்தால் நீங்களும் அதில் அவருக்கு உதவி செய்யுங்கள். (புகாரி)

கொள்வதில் உங்களில் மிகச் சிறந்தவனாக இருக்கின்றேன். (திர்மிதி)

மேலும் அன்னார் கூறினார்கள்: சுவர்க்கம் உங்கள் தாய்மார்களின் காலடிகளின் கீழ் இருக்கின்றது. (நஸாயீ)

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 14 February 2019 Issue No. 7

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஏனென்றால், இறையச்சத்தை மேற்கொள்வதைத் தவிர வேறு எந்தவொரு விஷயத்தினாலும் இறைவன் திருப்தியடைவதில்லை என்பது அறிவுடைத்த ஒருவர் அறிந்ததே.

إِنَّ اللّٰهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا وَّالَّذِينَ هُمْ مُّحْسِنُونَ

அதாவது நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்–களுடனும், நன்மை செய்பவர்களுடனும் இருக்கின்றான். **(16:129)**

நமது ஜமாஅத் குறிப்பாக இறையச்சத்தை மேற்கொள்வது அவசியமாகும். அவர்கள் எத்தகைய ஒரு நபருடன் தொடர்பை வைத்திருக்கின்றார்கள் என்றால் அவருடைய வாதம் இறைவன் புறமிருந்து தாம் வந்ததாகக் கூறுகின்ற அவரது இயக்கத்தில் பைஅத் செய்துள்ளனர். எனவே ஏதாவதொரு காழ்ப்புணர்ச்சியிலும், பகைமையிலும் அல்லது இணைவைப்பிலும் மூழ்கி இருக்கின்ற அல்லது உலகத்தின் பக்கம் குனிந்திருக்கின்ற அந்த மக்கள் இந்த அனைத்துத் தண்டனைகளிலிருந்தும் இரட்சிப்பைப் பெற வேண்டும் என்பதற்காகக் குறிப்பாக இறையச்சத்தை மேற்கொள்வதன் அவசியம் இருக்கின்றது.

நீங்கள் அறிவீர்கள். ஒருவர் நோயுற்றால் அந்த நோய் சிறியதோ அல்லது பெரியதோ அந்த நோயிற்கான சிகிச்சையை மேற்கொள்ளவில்லை என்றால் அந்த சிகிச்சைக்காக அவர் துன்பத்தை மேற்கொள்ளவில்லை என்றால் அந்த நோய் சரியாக முடியாது. ஒரு கரும்புள்ளி முகத்தில் தோன்றி இந்த புள்ளி பெரிதாகி முழு முகத்தையும் கருப்பாக்கி விடக்கூடாது என்ற கவலையை ஏற்படுத்தி விடுகின்றது. அவ்வாறே பாவத்திகும் ஒரு கரும் புள்ளி உள்ளத்தில் ஏற்படுகிறது. அந்த சிறிய பாவங்கள் பற்றி எரிவதனால் பெரும் பாவங்களாகி விடுகின்றன. அந்த சிறிய புள்ளி அது பெரிதாகி இறுதியில் முழு முகத்தையும் கருப்பாக்கி விடுகின்றது.

அல்லாஹ் கருணை காட்டக் கூடியவனானவும், மன்னிக்கக் கூடியவனாகவும் இருப்பதைப் போன்று தண்டனை வழங்கக் கூடியவனாகவும், பழிக்குப் பழி வாங்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். அவன் ஒரு ஜமாஅத்தைப் பார்க்கின்றான். அவர்களது வாதம் ஒன்றாகவும், அவர்களது செயல் நிலைமைகள் வேறென்றாகவும் இருக்கும்போது அவனது கோபம் அதிகமாகி விடுகின்றது. பிறகு இத்தகைய ஜமாஅத்திற்கு தண்டனை தருவதற்காக அவன் நிராகரிப்பவர்களையே தேர்ந்தெடுக்கின்றான்.

வரலாற்றை அறிந்திருப்பவர்கள் இதனை நன்கு அறிவர். அதாவது பல முறை முஸ்லிம்கள் நிராகரிப்பவர்களிள் மூலம் கொல்லப்பட்டனர். செங்கீஸ் கான் மற்றும் ஹலாக்கு கான் முஸ்லீம்களை அழித்து விட்டனர். ஆனால் முஸ்லிம்களுக்கு ஆதரவளிப்பதாகவும், உதவி செய்வதாகவும் அல்லாஹ் வாக்குறுதியளித்துள்ளான். இவ்வாறிருந்தும் முஸ்லிம்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். இவ்வாறான சம்பவங்கள் சில நேரங்களில் ஏற்பட்டன. இதற்கான காரணம் என்னவென்றால், ஒரு சமுதயாம் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று கூறுகின்றது. ஆனால் அவர்களது உள்ளம் வேறொன்றின் பக்கம் இருப்பதையும், தமது செயல்கள் மூலம் முற்றிலும் உலத்தின் பக்கம் சென்று விட்டதையும் அல்லாஹ் பார்க்கின்றபோது பிறகு அவனது தண்டனை தனது தோற்றத்தை வெளிப்படுத்துகின்றது.

**சொல்லிலும் செயலிலும் ஒன்றுபட்டிருக்க வேண்டும்**

அல்லாஹ்வின் மீதான அச்சமானது, மனிதன் தனது கூற்றும் செயலும் ஒன்று மற்றொன்றோடு ஒத்துப்போகின்றதா என்பதைப் பார்ப்பதில்தான் இருக்கின்றது. அவனது கூற்றும் செயலும் சமமாக இருக்கவில்லை என்றால் பிறகு இறைவனது கோபம் வெளிப்படும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். உள்ளம் தூய்மையற்றதாக இருந்து அவரது கூற்று எவ்வளவு தூய்மையானதாக இருந்தாலும் அந்த உள்ளத்திற்கு இறைவனது பார்வையில் எந்த மதிப்பும் கிடையாது. மாறாக, இறைவனது கோபம் பொங்கி எழும்.

எனவே எனது ஜமாஅத் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் விதையை விதைத்து அதன் மூலம் கனி தரக்கூடிய மரமாக ஆக வேண்டும் என்பதற்காகவே என்னிடம் வந்துள்ளனர். எனவே ஒவ்வொருவரும் தனது அகம் எவ்வாறு இருக்கின்றது? மேலும் தனது புறம் எவ்வாறு இருக்கின்றது என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது ஜமாஅத்தும் இவ்வாறு இருக்குமென்றால் அதாவது அவர்களது உள்ளத்தில் ஒன்றும், நாவில் ஒன்றும் இருக்கமென்றால் பிறகு முடிவு நல்லதாக இருக்காது.

ஒரு ஜமாஅத் உள்ளத்தால் காலியாகவும், மேலும் நாவளவிலான வாதங்களை செய்வதையும் இறைவன் பார்க்கின்றபோது அவன் தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான். அவன் யாரையும் பொருட்படுத்துவதில்லை. பத்ர் போரில் வெற்றிக்கான முன்னறிவிப்பு வழங்கப்பட்டிருந்தும், ஒவ்வொரு புறமும் வெற்றிக்கான நம்பிக்கையே இருந்த போதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழுதழுது துஆ செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், வெற்றிக்கான வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. பிறகு என்ன அவசியம் வந்து விட்டது? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவனது இருப்பு தன்னிறைவு பெற்றதாகும். அவனது வாக்குறுதியில் ஏதாவதொரு மறைமுகமான நிபந்தனைகள் இருக்கலாம் என்று கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 5–8)

***நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்***

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

**திருக்குர்ஆனிலிருந்து....**

(சுவர்க்கத்திற்குரிய) அவர்களின் பார்வைகள் நரகத்திற்குரியவர்களின் பக்கம் திருப்பப்படும்போது, அவர்கள் எங்கள் இறைவா! எங்களை அநீதி இழைக்கும் சமுதாயத்தினரைச் சார்ந்தவர்களாக ஆக்கி விடாதிருப்பாயாக என்று கூறுவர். (7:48)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad